2002 ஏப்ரல் 26]
241—

ஊரகத் தொழில்கள்

***12956—திரு. ப. சிதம்பரம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதியிலுள்ள புளியம்பட்டியில் ஊரகத் தொழில்கள் தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பவானிசாகர், புளியம்பட்டி பகுதியில் வட்டார அளவில் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு முகாம் நடத்தி, சிறுதொழில் பற்றிய கருத்துகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. சிதம்பரம்

திரு. ப. சிதம்பரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வரலாற்றில் அசைக்க முடியாத ஆற்றல்மிக்க சக்தியாக விளங்கிக்கொண்டிருக்கும் எங்கள் அன்னை மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி என் கேள்வியைத் தொடங்குகின்றேன். எனது பவானிசாகர் தொகுதியில், புஞ்சை புளியம்பட்டியில் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்கள் பெருமளவில் வாழ்கின்றார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திட நடப்பு நிதியாண்டில் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு சிறுதொழில் தொடங்கிட முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர், புளியம்பட்டி பகுதியில் வட்டார அளவில் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு முகாம் நடத்தி, சிறுதொழில் வளர்ச்சிக்கு ஏதுவாக தொழில் பற்றிய கருத்துகள் வழங்கப்பட்டு

வருகின்றன. ஆர்வமுள்ள தொழில் முனைவோர், இப்பகுதியில் தொழிற்சாலைகள் நிறுவ பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், ஈரோடு அவர்களை அணுகும்பட்சத்தில் அவர்களுக்குத் தகுந்தத் ஆலோசனை வழங்கி, ஊக்கம் அளித்து தொழில் துவங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாணை எண் 41, தொழில் துறை, நாள் 19-3-1996-ன்படி, பவானிசாகர் வட்டாரம் தொழில்ரீதியாகப் பின்தங்கிய வட்டாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் அமையும் தொழில் நிறுவனங்களுக்கு நிலையான முதலீட்டில் 15 சதவிகிதம், அதிகபட்சமாக 15 இலட்சம் மானியமாக அரசுத் துறையின் மூலம் வழங்கப்படுகிறது. மேலும், தொழில் துவங்குகின்ற நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்கு மின்சார மானியம் முறையே 40%, 30%, 20% என்ற அளவிலே வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இத்துறையில் செயல்படுத்தப்பட்டுவரும் பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலம் ஊரகத் தொழில் வளர்ச்சிப் பணி நடைபெறுகிறது. இத்திட்டத்தின்கீழ் 8 ஆம் வகுப்பு தேர்ச்சிபெற்ற 18 முதல் 35 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் சுய தொழில் துவங்க பயிற்சி அளித்து, கடன் வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டு வருமானம் ரூபாய் 40,000-க்கு மிகாமல் இருக்க வேண்டுமென்ற அளவுகோலை நிர்ணயித்து, பெண்கள், உடல் ஊனமுற்றோர், ஆதிதிராவிடர், பழங்குடியினர், முன்னாள் படைவீரர் ஆகியோருக்கு 18 முதல் 45 வயது வரை பயிற்சி அளித்து, கடன் வழ்ங்கப்பட்டு தொழில் முனைவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்துவருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 242, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

242—

வீட்டுமனைப் பட்டா

***13921—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—